# இனவாதப் போக்கு இன்னும் முக்கிய பிரச்சினை: சிங்கப்பூரர்கள் கருத்து

***Tamil Murasu,*** 3 April 2022

சிங்கப்பூர்க் குடியிருப்பாளர்கள் பெரும்பாலோர், இனவாதத்தைக் காட்டும் போக்கு இன்னும் முக்கியமான பிரச்சினையாக இருப்பதாகக் கருதுகின்றனர். குறிப்பாக அதிகம் படித்த இளம் வயதினரிடையே இந்தக் கருத்து இருப்பதாகத் தெரிகிறது.

‘சிஎன்ஏ’யும் கொள்கை ஆய்வுக் கழகமும் இணைந்து நடத்திய கருத்தாய்வில் இந்த விவரங்கள் வெளியிடப்பட்டன.

நவம்பர் 2021க்கும் ஜனவரி 2022க்கும் இடையே 21 வயதுக்கும் மேற்பட்ட 2,000 பேர் இந்த ஆய்வில் பங்கேற்றனர்.

கடந்த ஐந்தாண்டுகளில் கூடுதலான பங்கேற்பாளர்கள் சீனர் அல்லாத ஒருவர் பிரதமராகவோ அதிபராகவோ பதவி வகிப்பதை வரவேற்பதாகக் கூறினர். 82 விழுக்காட்டு பங்கேற்பாளர்கள், ஒரு இந்தியர் அதிபராகப் பதவிவகிப்பதை வரவேற்கின்றனர்.

வேலையிடங்களில் சிங்கப்பூரைச் சேர்ந்த சீன, மலாய், இந்திய இனத்தவர் சக ஊழியர்களாக இருப்பதைப் பொதுவாக பங்கேற்பாளர்கள் விரும்புவது கருத்தாய்வில் தெரியவந்தது.